www.Padasalai.Net www.CBSEtips.in

Reg.No. | | | | | | |

# இரண்டாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு – 2019

காலம்:2.00மணி வகுப்பு – 7 மதிப்பெண்கள்: 60

## அறிவியல்

### பிரிவு – அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** 5 x 1 = 5

1. மனிதனின் சராசரி உடல் வெப்பநிலை ..........
   அ) 0°C ஆ) 37°C இ) 98°C ஈ) 100°C
2. ......... என்பது கால ஒழுங்கு மாற்றத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.
   அ) பூகம்பம் ஆ) வானில் வானவில் தோன்றுவது
   இ) கடலின் அலைகள் தோன்றுவது ஈ) மழை பொழிவு
3. செல்லின் மூளையாகச் செயல்படும் செல்லின் பாகம் எது?
   அ) லைசோசோம் ஆ) ரைபோசோம் இ) மைட்டோகாண்ட்ரியா ஈ) உட்கரு
4. புறாவின் இருசொற்பெயர்
   அ) ஹோமோ செபியன் ஆ) ராட்டஸ் ராட்டஸ்
   இ) மாஞ்சிபெரா இண்டிகா ஈ) கொலம்பா லிவியா
5. TUX Paint எதற்காகப் பயன்படுகிறது
   அ) வண்ணம் தீட்ட ஆ) நிரல் அமைக்க இ) வருட ஈ) PDF ஆக மாற்ற

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 x 1 = 5

6. அறை வெப்பநிலையில் பாதரசம் ............... நிலையில் காணப்படுகிறது.
7. மின்னோட்டத்தை அளக்க ........... என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது.
8. உணவு கெட்டுப்போதல் என்பது ............. மாற்றமாகும்.
9. நான் தாவரத்தில் சூரிய ஆற்றலை உணவாக மாற்றுவேன். நான் யார்? .........
10. .......... தந்தை கரோலஸ் லின்னேயஸ்

**III. சரியா? தவறா?** 5 x 1 = 5

11. பக்க இணைப்பில், மின் சாதனங்கள் கிளைகளாகப் பிரிக்கப்படுகின்றன.
12. வெள்ளி நகையின் நிறம் மங்குதல் என்ற நிகழ்வு வெப்ப ஏற்பு மாற்றமாகும்.
13. தாவரச் செல்களில் மட்டுமே பசுங்கணிகங்கள் உள்ளன.
14. மீன்கள் நீரில் வாழும் முதுகெலும்புடையவை ஆகும்.
15. விலங்கு செல்கள் செல்சுவர் பெற்றவை.

**IV. பொருத்துக.** 5 x 1 = 5

16. கடத்தும் கால்வாய் – உட்கரு
17. தற்கொலைப்பை – எண்டோபிளாச வலைப்பின்னல்
18. கட்டுப்பாட்டு அறை – லைசோசோம்
19. ஆற்றல் மையம் – பசுங்கணிகம்
20. உணவு தயாரிப்பாளர் – மைட்டோகாண்டிரியா

**V. ஒப்புமைப்படுத்துக.** 6 x 1 = 6

21. நீர்: குழாய் : மின்னூட்டம் : ..............
22. தாமிரம் : கடத்தி : மரக்கட்டை : .............

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



23. நீளம் : மீட்டர் அளவு கோல் : மின்னோட்டம் : ..............
24. பாக்டீரியா : நுண்ணுயிரி : மாமரம் : ..............
25. அடிப்போஸ் :திசு : கண் : ..............
26. செல்சுவர் : தாவரம் : சென்ட்ரியோல் : ............

**VII. ஏதேனும் 12 வினாக்களுக்கு மட்டும் விடையளி. 12 x 2 = 24**

27. நம்மால் ஏன் மருத்துவ வெப்பநிலைமானியினைப் பயன்படுத்தி காற்றின் வெப்நிலையினை அளக்க இயலாது.
28. மருத்துவ வெப்பநிலைமானியில் காணப்படும் சிறிய வளைவின் பயன்பாடு யாது?
29. மின்னோட்டத்தின் வேகம் என்ன?
30. அரிதிற் கடத்திகள் சிலவற்றைக் கூறுக.
31. மின்கலம் என்பது என்ன?
32. கால ஒழுங்கு மாற்றங்களுக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.
33. இரு வெப்ப உமிழ்வினைகளைக் குறிப்பிடுக.
34. செயற்கை முறையில் பழத்தினை பழுக்க வைத்தல் எந்த வகை மாற்றமாகும்.
35. இதயத்துடிப்பு கால ஒழுங்கு மாற்றமாகும். ஏன்?
36. தாவரச் செல்லின் செல்சுவரின் பணிகள் யாவை?
37. சூரியனின் ஒளி ஆற்றலைப் பயன்படுத்தி ஸ்டார்ச் தயாரிக்கும் நுண் உறுப்பு எது?
38. லைசோசோம் செல்களின் துப்புரவாளர்கள் என ஏன் அழைக்கப்படுகிறது?
39. வகைப்பாட்டியல் என்றால் என்ன?
40. மொனிராவிற்கு இரண்டு உதாரணம் தருக.
41. இரு சொற்பெயரிடும் முறை என்பது யாது?
42. ரேஞ்சர் விளையாட்டின் பயன் யாது?

**VIII. ஏதேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2 x 5 = 10**

43. மருத்துவ வெப்பநிலைமானியின் படம் வரைந்து அதன் பாகங்களைக் குறிக்கவும்.
44. தொலைபேசி ஒன்றின் அமைப்பு மற்றும் செயல்படும் விதம் பற்றி விளக்குக.
45. இருசொற் பெயரிடும் முறை குறிப்பு வரைக.

www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com